‘டபுள் எஞ்சின்’ என்னும் ‘டப்பா எஞ்சின்’ தமிழ்நாட்டில் ஓடாது

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் தடைகளை தகர்த்தே தமிழ்நாடு வரலாற்று வளர்ச்சியை பெற்றுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.25-

டபுள் என்ஜின் என்று சொல்லி பிரதமர் மோடி பேசியதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் சமூக வலைதளப் பக்கத்தில் பதிலளித்துள்ளார்.

அதில், ‘டபுள் எஞ்சின்’ என்னும் ‘டப்பா எஞ்சின்’ தமிழ்நாட்டில் ஓடாது என்றும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் அத்தனை தடைகளைத் தகர்த்தெறிந்து தான் தமிழ்நாடு வரலாற்று வளர்ச்சி அடைந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பிரதமர் சொல்லும் “டபுள் எஞ்சின்” எனும் “டப்பா எஞ்சின்” தமிழ்நாட்டில் ஓடாது!**

**மாண்புமிகு பிரதமர் அவர்களே...**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏற்படுத்தி வரும் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்து தான் தமிழ்நாடு வரலாறு பேசும் வளர்ச்சியை அடைந்திருக்கிறது.**

**கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க...**

**நீங்கள் சொல்லும் “டபுள் எஞ்சின்” மாநிலங்களான உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகாரைவிட, தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா, கர்நாடகா, மேற்கு வங்கம் என உங்கள் “டப்பா எஞ்சின்” நுழையாத மாநிலங்கள்தான் வளர்ச்சியில் கொடிகட்டிப் பறக்குது.**

**தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பா.ஜ.க. செய்யும் துரோகங்களை, நீங்கள் மறைத்தாலும் #NDABetraysTN என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.**

**தில்லியின் ஆணவத்துக்குத் #தமிழ்நாடு_தலைகுனியாது!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்’ தொடர்பாக –
சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும் ‘அரசினர் தனித் தீர்மானத்தை’

# பிரதமரிடம் - எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்து வலியுறுத்துவார் என எதிர்பார்க்கிறேன்!

## சட்டப்பேரவை விவாதத்திற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை!

**சென்னை, ஜன.25-**

**சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் தாம் முன்மொழிந்த ‘100 நாள் வேலைத் திட்டம்’ குறித்த அரசினர் தனித் தீர்மானம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பிரதமர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைச் சந்திக்கும்போது, இதனை எடுத்துரைத்து வலியுறுத்துவார் என எதிர்பார்க்கிறேன்” என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தொடர்பாக கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த பின்னர், இறுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து ஆற்றிய உரை வருமாறு:-

கூட்டாட்சித் தத்துவத்திற்குச் சவால் விடுகிற வகையிலும், ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட விளிம்பு நிலையில் இருக்கின்ற மக்களுடைய சமூகப் பாதுகாப்பு தகர்ந்திடும் விதத்திலும் கொண்டுவரப்பட்டுள்ள ஒன்றிய அரசினுடைய இப்புதிய திட்ட நடவடிக்கைக்கு எதிராக, நமது அரசால் முன்வைக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தின் மீது, உறுப்பினர்கள் ஈ.ஆர். ஈஸ்வரன், முனைவர் ஜவாஹிருல்லா, கு.சின்னப்பா, கே. மாரிமுத்து, ம. சின்னத்துரை, மு.பாபு, ஜி.கே.மணி, கு.செல்வப்பெருந்தகை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக முதலிலே அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பிரதமர் அவர்கள் வருகிற காரணத்தால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவரைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். இதே கருத்தை, அவர் பிரதமர் அவர்களைச் சந்திக்கும்போது எடுத்துச் சொல்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது. எப்படி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்தத் தீர்மானத்தின் மீது கருத்துகளை எடுத்து வைத்தாரோ, அதே அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பிரதமர் அவர்களிடத்திலே கருத்துகளை எடுத்து வைத்து, நிச்சயமாக வழிமொழிந்து பேசுவார் என்று நான் எதிர்பார்க்கிறேன். நான் மட்டுமல்ல; இங்கே இருக்கக்கூடிய நீங்களும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டு மக்களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகையில், ஏதோ ஒரு தோற்றத்தை உருவாக்கக்கூடிய வகையிலே இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி, அதைப் பதிவு செய்திருக்கிறார். ஆனால், கிராமப்புற மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவர்கள் முதலிலே தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எது எப்படியிருந்தாலும், நான் அதைப் பற்றியெல்லாம் அதிகம் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஆனால், அதேநேரத்தில் குறை சொல்லி, ஏதோ ஒரு தோற்றத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லியிருந்தாலும், அதுவும் இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நாம் கொண்டிருக்கக்கூடிய கொள்கையிலே ஏதோ உறுதியாக இருப்பதைப் போன்று தோன்றுகிறது. அப்படித் தோன்றக்கூடியதை உறுதி செய்யக்கூடிய வகையில் நிச்சயமாக பிரதமர் அவர்களிடத்திலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்வார் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தை பேரவைத் தலைவர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இத் தீர்மானம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றினார்.

இதனையடுத்து - முதல்வர் அவர்கள் முன்மொழிந்த ‘அரசினர் தனித் தீர்மானம்’. பேரவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி என்ற பாரபட்சமின்றி விளையாட்டரங்குகள் அமைக்கப்படுகின்றன! கழக ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும்

# 141 இடங்களில் ‘மினி ஸ்டேடியங்கள்’ கட்டியிருக்கிறோம்!

## சட்டப்பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினரின் உண்மைக்கு மாறான கூற்றை மறுத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆதாரங்களுடன் பதிலடி!

**சென்னை, ஜன.25–**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அ.தி.மு.க. உறுப்பினர் அக்ரி கிருஷ்ண மூர்த்தி, தமிழ்நாட்டில் மினி ஸ்டேடியங்கள் கட்டப்படுவது குறித்து தெரிவித்திருந்த உண்மைக்கு மாறான கூற்றை மறுத்து ஆதாரங்களுடன் பதிலடி கொடுத்தார்.**

**அப்போது துணை முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டு கால கழக ஆட்சியில் மட்டும் 141 இடங்களில் ‘மினி ஸ்டேடியங்கள்’ கட்டியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ப.அப்துல் சமது நன்றி தெரிவித்திருக்கிறார். நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் தன்னுடைய தொகுதியில் mini stadium அமைத்ததற்கு நன்றி தெரிவித்திருக்கிறார். அதற்கு என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்றையதினம் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது, நம்முடைய திராவிட மாடல் அரசு, சட்டமன்றத் தொகுதிகள்தோறும் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கங்களைக் கட்டவில்லை என்று உண்மைக்கு மாறான ஒரு தகவலை கூறியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் மாநகரங்களில் மட்டுமல்லாமல், கிராமங்களிலுள்ள எல்லாப் பகுதிகளிலும், பரவலாக அனைத்து இடங்களிலிருந்தும் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள், “ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் விரைவாக ‘மினி ஸ்டேடியம்’ அமைக்கப்படும்” என்ற வாக்குறுதியைக் கொடுத்து, அதற்கான உத்தரவையும் பிறப்பித்திருந்தார்கள். அதன்படி, தேவையான இடம் தயாராக இருந்த 82 சட்டமன்றத் தொகுதிகளில் ஸ்டேடியம் கட்ட முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். அதற்காக நிதியையும் ஒதுக்கிக் கொடுத்தார்கள்.

அரசு நிதியாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாயும், மேலும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயும் தர வேண்டும். மொத்தம் ரூ.3 கோடி இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. 80 ஸ்டேடியங்களில் அதற்கான வேலைகள் ஆரம்பித்தாலும், அதில் இதுவரைக்கும் 8 ஸ்டேடியங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதனை அங்கிருக்கக்கூடிய பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, மீதம் இருக்கக்கூடிய ஸ்டேடியங்கள் எல்லாம் வருகின்ற பிப்ரவரி மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு, நிச்சயமாகத் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவை தவிர, 59 தொகுதிகளில் ஏற்கெனவே இருந்த ஸ்டேடியங்களையெல்லாம் புனரமைப்பதற்காக renovation செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதற்காக தனியாக ரூ.50 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 59 தொகுதிகளில் renovation work, 35 தொகுதிகளில் stadium renovation work செய்து முடிக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டில் மீதம் இருக்கக்கூடிய 24 ஸ்டேடியங்களினுடைய renovation work செய்து முடிக்கப்படும். ஆக மொத்தம், 141 சட்டமன்றத் தொகுதிகளில் ஸ்டேடியங்கள் அமைப்பதற்கான பணிகளும், renovation worksம் சேர்த்து முடிக்கப்பட் டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற சட்டமன்றத் தொகுதிகளிலும் ஸ்டேடியம் அமைப்பதற்கு நிலம் தேர்வு செய்யச் சொல்லி, அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

3 முதல் 5 ஏக்கர் வரை நிலம் கிடைத்தால், உடனே Stadium கட்டுவதற்கான பணிகளை நாங்கள் தொடங்கியிருக்கின்றோம்.

விளையாட்டு அரங்குகளைப் பொறுத்தவரை, அங்கே குறைந்தது 5 விளையாட்டு பயிற்சிகளுக்காக ஜிம்



போன்ற வசதிகளெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். அந்த 5 விளையட்டுப் போட்டிகளில் ‘ஜிம்’ compulsory. அனைத்து mini stadiumsலும் ‘ஜிம்’ கட்டாயம் என்பதை நாம் கடைபிடித்து வருகின்றோம். அதுமட்டுமல்ல, அந்தந்த தொகுதிகளில் அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களைத் தொடர்புகொண்டு எந்தெந்த பகுதிகளில் எந்த விளையாட்டு பிரபலமாக இருக்கின்றதோ, எந்த விளையாட்டு வீரர்கள் அதிகமாக அதைப் பயன்படுத்துகிறார்களோ, அந்த வகையில் மீதம் 4 விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

முக்கியமான விஷயம், இந்த மினி ஸ்டேடியங்களைப் பொறுத்தவரை, எந்த பாரபட்சமும் பார்க்காமல், ஆளுங்கட்சி–எதிர்க்கட்சி என்று எந்த வித்தியாசமும் காட்டாமல், அனைத்துத் தொகுதிகளிலும் இந்த முயற்சியை எடுத்துக்கொண்டு செய்து வருகின்றோம்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியாக இருக்கட்டும், பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளாக இருக்கட்டும், எல்லோருடைய தொகுதிகளிலும் ‘மினி ஸ்டேடியம்’ அமைக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய, முதலமைச்சர் அவர்களுடைய ஒரே நோக்கம்.

இந்த அவையிலே எடுத்துக்காட்டுக்காகச் சொல்கிறேன். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 62 பேர் இருக்கின்றார்கள். அந்த 62 சட்டமன்ற உறுப்பினர்களில், இன்றைக்கு 32 உறுப்பினர்களுடைய தொகுதிகளுக்கு ஸ்டேடியம் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி, 4 பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில், 3 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு ‘மினி ஸ்டேடியம்’ ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அண்ணன் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே இல்லை. ஒரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அவருடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கக்கூடிய 8 தொகுதிகளில், 6 தொகுதிகளில் Renovation மற்றும் புதிய Stadium உட்பட 6 தொகுதிகளில் Mini Stadium வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். அவர்களின் முந்தைய ஐந்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் Sports Infrastructure போன்ற பணிகளுக்காக 170 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் இதுமாதிரி Sports Infrastructureக்கு ஒதுக்கப்பட்ட நிதி மொத்தம் 380 கோடி ரூபாய். பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் Sports Infrastructureக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.380 கோடி. ஆனால், நம்முடைய ஐந்தாண்டுகால ஆட்சியில் நம்முடைய திராவிட மாடல் அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், infrastructureக்காக மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.600 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஐந்தாண்டுகால ஆட்சியில், பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியைவிட அதிகமான நிதியை ஒதுக்கி, அதிகமான infrastructuresஐ உருவாக்கியிருக்கின்றோம். எனவே, சொல்வதைச் செய்கின்ற அரசாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய திராவிட மாடல் அரசும் சிறப்பாகச் செய்திருக்கிறது. ஆனால், அவர்கள் என்ன செய்தார்கள்? மதுரையில் 2017 ஆம் ஆண்டு AIIMS மருத்துவமனை கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லி, 2019 ஆம் ஆண்டு அதற்கான ஒற்றைச் செங்கல்லை வைத்துவிட்டு சென்றார்கள். இன்றுவரையில் அதைக் கட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். 8 வருடங்களாகியும் அது முடிக்கப்படவில்லை.

2019 ஆம் ஆண்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அப்போதைய முதலமைச்சர் அவர்களும், பாரதப் பிரதமர் அவர்களும் கூட்டாக அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இன்றைக்கும் அவர்கள் கூட்டணி வைத்திருக்கிறார்கள். இன்றையதினம்கூட, மாண்புமிகு பிரதமர் அவர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார். தேர்தல் வரப் போகிறது. இனி, எப்படியும் 10 முறையாவது வந்துவிடுவார். நிச்சயம் மீண்டும் அவரை மதுரைக்குக் கொண்டு சென்று, அந்த AIIMS மருத்துவமனையைக் காட்டி, இதற்கு என்றைக்குதான் விடிவுகாலம் பிறக்கும், என்றைக்குதான் இதனைத் திறப்பீர்கள் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அண்ணன் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இதனைக் கொண்டு சென்று, இதற்கொரு விடிவுகாலம் வந்தால் தமிழ்நாட்டு மக்கள் அதற்கு நன்றி சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டுத் துறையில் கடந்த மூன்றாண்டுகளில் 141 இடங்களில் mini stadiumsஐ நாங்கள் கட்டியிருக்கிறோம். ஆக, முழுப் பூசணிக்காயை நீங்கள் சோற்றில் மறைக்க நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால், முழுவதுமாகக் கட்டப்பட்ட stadiumஐ எப்படிச் சோற்றில் மறைப்பீர்கள் என்பதை பதிய வைத்துக்கொண்டு, இதன் வாயிலாக அண்ணன் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு இதனை பதிலாகக் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு சட்டப்பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



ஈரோடு தெற்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு மகளிருக்கான திருவிழா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் கோலப்போட்டி, எம்ராய்டரி, மெஹந்தி, காய்,கனியில் உருவம் வடிவமைத்தல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பரிசுகள் வழங்கினார். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கே.குமார் முருகேஸ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, ராஜு ( எ) முருகேசன், என்.டி.பத்மநாபன், எம்.கேசவன், நா.மகாலிங்கம், மு.பல்கீஸ், ஆர்,பொன்னுசாமி, பி.கதிர்வேல், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், ப.க.பழனிச்சாமி, மு.ப.சுப்பிரமணியம், ப.சசிகுமார், குறிஞ்சி என்.தண்டபாணி, பொ.ராமச்சந்திரன், எஸ்.குமாரவடிவேல், வி.சி.நடராஜன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், அக்னி டி.சந்திரசேகர், கா.லட்சுமண குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, BLC நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூராட்சி, அண்ணா நகர், சந்தை வளாகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் ப.பழனிசாமி, துரை.தமிழரசு, பேரூராட்சித் தலைவர்கள் மூலனூர் பேரூர் கழக செயலாளர் மக்கள் க.தண்டபாணி, கன்னிவாடி ரேவதி சுரேஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.